Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 16, 2022

புதன்கிழமை நவம்பர் 16, 2022 | ஒளி: 08 கதிர்: 144 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## உலக சனத்தொகை 8 பில்லியன்



உலக மக்கள் தொகையானது நவம்பர் 15ஆம் திகதியுடன், 8 பில்லியனை எட்டியிருக்கும் என ஐக்கிய நாடுகள் சபையால் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் 2023ஆம் ஆண்டில், உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக சீனாவை, இந்தியா விஞ்சி நிற்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தமிழர்களை கைவிடோம்



■ பா.நிரோஸ்

அரசாங்கம் முன்னெடுக்கும் எந்தவொரு வேலைத்திட்டத்திலும் தமிழ் மக்களைப் புறக்கணிக்கவோ அல்லது கைவிடவோ மாட்டோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நேற்றைய (15) விவாதத்தின் போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையசரன் உரைக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் நிலவும் போதைப்பொருள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய அம்மாகாண ஆளுநர் தலைமையில் விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல், நாடு முழுவதிலும் செயலணிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க

# ஐ.நாவின் பங்களிப்பு அவசியம்

### சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் வலியுறுத்து



“வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு மிகவும் காத்திரமாக இருக்க வேண்டும்” என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஒரே குரலில் வலியுறுத்தினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவின் இயக்குநர் அடங்கலான குழுவினரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நேற்று (15) காலை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே கூட்டமைப்பினர் மேற்கண்டவாறு எடுத்துரைத்தனர்.

கொழும்பில் ஐ.நா. அலுவலகத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன்,

தொடர்ச்சி P2

## பசியில் பரிதவிக்கும் ஏழைக்கு என்ன பதில்?

■ க. அகரன்



‘பட்டினி, மந்த போசாக்கு என்பது திட்டமிட்ட குற்றமாகும்’ எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் மக்கள் திட்டம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உலக உணவு தின நிகழ்வுகள் நேற்று (15) முன்னெடுக்கப்பட்டன. ஒன்றியத்தின் இணைப்பாளர் ந.தேவகிருஷ்ணன் தலைமையில் ‘அருந்ததி’ விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார், முல்லைத்தீவு,

தொடர்ச்சி P2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## 16 பேருக்கும் 29 வரை விளக்கமறியல் நீடிப்பு

■ கனகராசா சரவணன்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் காத்தான்குடியில் கைது செய்யப்பட்ட 16 பேரின் விளக்கமறியலும் எதிர்வரும் 29ஆம் திகதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## துறைமுகத்தில் 4 இலட்சம் கிலோ கிராம் பால்மா

### 25 நாள்கள் கடந்துவிட்டன; மீண்டும் விலை அதிகரிக்கலாம்



நான்கு இலட்சம் கிலோ கிராம் பால்மா அடங்கிய 17 கொள்கலன்கள் கடந்த 25 நாள்களாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக, பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி லக்ஷ்மன் விஜேசூரிய, நேற்று (15) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில்

## நாட்டின் மீட்சிக்கான பரிந்துரைகள் உள்ளன

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தில், நாட்டின் பொருளாதார மீட்சியை ஸ்திரப்படுத்திக்கொண்டு, எவ்வாறு முன்னோக்கி நகர்வது என்பது குறித்தே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்கும் பிணை



ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட 15 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (15) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## அமரர் அமரகீர்த்தியின் மனைவிக்கு நன்கொடை



பாராளுமன்ற உறுப்பினர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட 90 இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாயை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தின்போது கொலை செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் மனைவியிடம் கையளித்தார்.

தொடர்ச்சி P2

### பாராளுமன்றத்தைக் கலைத்து

## உள்ளூராட்சி மன்ற தேர்தலோடு பொதுத் தேர்தலையும் நடத்துக

■ பா.நிரோஸ்




பாராளுமன்றத்தை கலைத்து, உள்ளூராட்சி மன்ற தேர்தலையும், பொதுத்தேர்தலையும் ஒன்றாக நடத்த வேண்டுமெனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அவ்வாறு செய்தால் பொதுத்தேர்தலுக்கு ஒரு சதம்கூட செலவிட வேண்டிய அவசியம் ஏற்படாதென தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### பொது பாதுகாப்பு அமைச்சின்

## செயலாளர், ஐ.ஜி.பிக்கு ஆணைக்குழு அழைப்பு

மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றமை குறித்து விசாரிப்பதற்காக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## உள்ளூராட்சி சபை தேர்தலை உரிய நேரத்தில் அறிவிப்பேன்

எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணியாது உரிய நேரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார். பாராளுமன்றத்தில் உள்ள 16 கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரை நேற்று (15) சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வவுனியா செல்கிறார் ஜனாதிபதி

■ க. அகரன்

வவுனியாவுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி, நான்கு முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். அரச உயர் அதிகாரிகளுடனான சந்திப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை இடம்பெறவுள்ளதுடன் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் சந்திக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதி உள்ளிட்ட சகலரும்

## ஊழலுக்கு மத்தியிலேயே தெரிவாகின்றனர்

■ பா.நிரோஸ்

ஜனாதிபதி, பாராளுமன்ற, உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஊழலுக்கு மத்தியிலேயே தெரிவு செய்யப்படுவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்ததுடன், இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு ஒன்றை புதிதாக ஸ்தாபிக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

வீழ்ந்துள்ள நாட்டை கட்டியெழுப்பும் நோக்கிலேயே வரவு -செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடு வீழ்ந்தமைக்கான காரணங்கள் அனைவருக்கும் தெரியும். தற்போதைய அரசியல் முறைமையில் நாட்டின் அரசியல்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தமிழர்களை கைவிடோம்

இதேவேளை, எவ்வித அழைப்பும் இன்றி கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு சென்றோம். அங்கே இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய 11 ஆயிரத்து 200 பேர் வரையிலானோர் உள்ளனர்.

அவர்களில் பலர் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதன்படி அங்கு மூன்று நடமாடும் சேவைகளை நடத்தியுள்ளோம். மேலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும், அதனை இரட்டிப்பாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். உங்களையோ, உங்கள் சமூகத்தையோ நாங்கள் புறக்கணிக்கவோ, கைவிடவோ இல்லை எனவும் தெரிவித்தார்.

# ஐ.நாவின் பங்களிப்பு அவசியம்

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (டெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலைமை பற்றியும் விசேடமாக வடக்கு, கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் நில அபகரிப்பு பற்றியும் எடுத்துக் கூறினோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

## "பசியில் பரிதவிக்கும் ஏழைக்கு என்ன பதில்?

வெலிஓயா, வவுனியா போன்ற பிரதேசங்களில் செயற்படும் அந்த அமைப்பாளர்களின் ஒத்துழைப்பில், மக்களுக்கு உணவளிக்கும் முறையில் மாற்றத்திற்காக ஒன்றிணைவோம் எனும் கருப்பொருளை மையப்படுத்தி அமைப்பினரால் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியில் மண்டபத்திற்கு வெளியே தமது பிரகடனத்தை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் மேற்கொண்டனர். காணி மற்றும் விவசாய சீரமைப்பு இயக்கம், மக்கள் திட்டம் ஒன்றியத்துடன் இணைந்து உலக உணவு தினத்தை அனுஷ்டித்தனர். இதில், மூவின மக்களும் பங்கேற்றிருந்தனர்.

## 16 பேருக்கும் 29...

இந்த வழக்கு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் நேற்று (15) செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்றமை மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் இந்த 16 பேரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல்களின் பின்னர் கைது செய்யப்பட்ட இவர்கள், சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றிருந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழே கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவரும் அடங்குவர்.

மொத்தமாக 66 பேர் கைது செய்யப்பட்டனர். வழக்கில் இருந்து 3 பேரை விடுவித்ததுடன் 63 பேரில் 47 பேர் பிணையில் வெளிவந்துள்ளனர். 16 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் மீட்சிக்கான..

பொருளாதார மீட்சிக்கு அவசியமான பல பரிந்துரைகள் இம்முறை முன்வைக்கப்பட்டுள்ளன என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவு திட்டம் குறித்து மத்திய வங்கியில் நேற்று (15) இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே நாடு பொருளாதார நெருக்கடியை நோக்கி பயணிப்பதை உணர முடிந்தது. கடன்களை மீள செலுத்த முடியாது ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளப்பட்டோம். இதனை கையாள பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். அவசியமாக எடுக்க வேண்டிய பல்வேறு தீர்மானங்களை முன்னெடுத்தோம். அத்துடன் கஷ்டப்படும் மக்களுக்கான அழுத்தங்களை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

இவ்வாறான தீர்மானங்கள் மூலமாக ஓரளவுக்கு நாடு ஸ்திரமான நிலைக்கு வந்துள்ளது. இதனை தக்கவைத்துக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தையே முன்னெடுக்க வேண்டும் என்றார்.

அதேபோல் கடன் மறுசீரமைப்பு குறித்து கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதன்போது கடன் வழங்குநர்களிடம் இருந்து நிவாரணங்களை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இப்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவு திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதும், அதன் மூலமாக வளர்ச்சியின் பக்கம் பொருளாதாரத்தை நகர்த்துவதற்கும் அவசியமான வேலைத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம் என்றார்.

இந்த வரவு- செலவு திட்டத்தில் பல்வேறு பரிந்துரைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. நாட்டை மீட்சியின் திசையில் கொண்டுசெல்ல அவசியமான பரிந்துரைகள் காணப்படுகின்றன. இதனை நடைமுறைப்படுத்துவதே அவசியமானதாகும். எனினும் இந்த வேலைத்திட்டங்களில் மக்கள் அதிகமாக கஷ்டப்பட வேண்டிவரும். எனவே, 2023 வரவு- செலவுதிட்டம் பொருளாதார மீட்சி அதனை ஸ்திரப்படுத்தியவாறு எவ்வாறு முன்னோக்கி நகர்த்துவது என்பது குறித்தே கவனம் செலுத்துகின்றது என்றார்.

## உள்ளூராட்சி மன்ற தேர்தலோடு பொதுத்தேர்தலையும் நடத்துக

வரவு- செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்று (15) ஆரம்பித்து உரையாற்றும்போதே ஹர்ஷ இவ்வாறு கூறினார்.

இந்த அரசாங்கத்தால் நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது வெறும் கனவே. இவ்வாறு நான் கூறுவதற்கு என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நாட்டு மக்களுக்கு புதிய மக்கள் ஆணை அவசியமென ஜனாதிபதியின் முன்பாக அழுத்தமாகக் கூறிய ஹர்ஷ, 21ஆவது திருத்தச் சட்டத்தின் படி எதிர்வரும் மார்ச் மாதம் புதிய மக்கள் ஆணையைப் பெற ஜனாதிபதிக்கு முடியும் என்றார்.

அமெரிக்க அரசியலின் மாணவன் என்றே ஜனாதிபதி ரணில் தன்னை பல தசாப்தங்களாகக் கூறி வருகிறார். அமெரிக்காவைப் பாருங்கள், செனட், மக்கள் பிரதிநிதிகள் சபைகளுக்கான தேர்தலை கடந்த வாரம் ஒரே தினத்தில் அமெரிக்கா நடத்தியுள்ளது. ஏன் இதனை இலங்கையில் செய்ய முடியாது? ஒரு சதம் கூட செலவு செய்யாது பொதுத்தேர்தலை நடத்த முடியும் என்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த 10 பில்லியன் வழங்கப்பட்டுள்ளதாக எம்மிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார். அப்படி என்றால், உள்ளூராட்சி மன்ற தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ஏன் ஒன்றாக நடத்த முடியாது. ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். நாம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமென கோரவில்லை. நீங்கள் ஜனாதிபதியாக இருங்கள். அரசியலமைப்பு ரீதியாகவே நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். நாம் அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்படப்போவதில்லை என்றார்.

ஆனால், புதிய அரசாங்கத்தை அமைக்க நாட்டு மக்களின் ஆணையைப் பெற்றுகொள்ள பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்றே கேட்கிறோம் என்றார்.

## 4 இலட்சம் கிலோ...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்ட அவர், ஆவணங்கள் மற்றும் கடன் பத்திரங்கள் தாமதமானதால் 15 கொள்கலன்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கொள்கலன்களை விடுவிக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிர்வாக திணைக்களத்தின் அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாகவே அவை தேங்கியுள்ளதாகவும் அவற்றுக்கு தாமதக் கட்டணமாக 40 இலட்சம் செலுத்த வேண்டியுள்ளதால் பால்மாவின் விலையை அதிகரிக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கப்பலில் பால்மாவை ஏற்றும் போது ஒரு சட்டமும், நடுக்கடலில் பயணிக்கும் போது மற்றொரு சட்டமும், கொழும்பு துறைமுகத்தை கப்பல் நெருங்கியதும் மற்றுமொரு சட்டமும் அமல்படுத்தப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொள்கலன்களை விடுவிப்பதற்கு அமைச்சு அனுமதி வழங்கியுள்ள போதிலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர், பால்மா கொள்கலன்களை விடுவிக்க மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் உப்புல்மலி பிரேமதிலக்கவிடம் வினவியபோது, திணைக்களத்தில் வினைத்திறனற்ற நிலைமை இல்லை எனவும் கட்டுப்பாட்டாளர் என்ற வகையில் தாம் எவ்வித ஆவணங்களையும் மறைக்கவில்லை என்றார். மேலும், பால்மா பிரச்சினை குறித்து சரியாகத் தெரியவில்லை எனவும் பொதுச் சட்டத்துக்கு மாறாக இறக்குமதி செய்யப்பட்டால் அதனை எக்காரணம் கொண்டும் விடுவிக்க மாட்டோம் என்று தெரிவித்தார்.

## ஹிருணிகா உள்ளிட்ட...

கறுவாத் தோட்டம் பொலிஸாரால், நேற்று முன்தினம் (14) கைது செய்யப்பட்ட சந்தேககநபர்கள், நேற்றைதினம், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

மேலும் வழக்கை எதிர்வரும் 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார்.

நவம்பரில் நினைவுகூரப்படும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியால் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

இதன்போது, ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகத்துக்கு முன்னால், பெண்களின் உரிமைக்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று வீதி நாடகம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தபோது, பாதுகாப்புப் படையினரின் சீருடையை ஒத்த ஆடைகளை அணிந்திருந்த சிலர் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஆர்ப்பாட்டக்காரர்களை விடுவிக்குமாறும் கோரி, ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்டோர் கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போதே கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செயலாளர், ஐ.ஜி.பிக்கு...

சமீப நாள்களில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் தன்னிச்சையான செயற்பாடுகளின் ஊடாக மக்களின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றமையை கண்காணிக்கக்கூடியதாக உள்ளதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது ஜனநாயக சமூகத்தின் உயிர்ப்பு மற்றும் சட்டவாட்சிக்கு பாரிய அச்சுறுத்தல் என்பதே மனித உரிமை ஆணைக்குழுவின் நிலைப்பாடு என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தை பாதுகாப்பதற்கும் நிலைநாட்டுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய, நவம்பர் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு செயலாளரும், பொலிஸ் மா அதிபரும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேவு பார்த்தவர் மீது சூடு

கம்பஹா, சியம்பலாபிட்டியவில் நேற்று (15) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் 41 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர், 2018 ஆம் ஆண்டு பஸ்பொட்டாவின் கொலைச் சம்பவத்தில் வேவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர் என்று தெரியவந்துள்ளது.

தனது பிள்ளையை அழைத்துச் செல்வதற்காக அப்பகுதியில் உள்ள பாடசாலைக்கு வந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவர் நபர் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## உலக சனத்தொகை 8 பில்லியன்

உலக மக்கள்தொகை 1950 ஆம் ஆண்டிலிருந்து மெதுவாக வளர்ந்து வருகிறது. இந்நிலையில்,ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய கணிப்புகளின் படி, 2030 இல் 8.5 பில்லியனாகவும், 2050 இல் 9.7 பில்லியனாகவும் வளரக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2080களில் சுமார் 10.4 பில்லியன் மக்கள் என்ற உச்சநிலையை அடைந்து 2100 வரை அந்த நிலையில் இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு உலக மக்கள்தொகை தினமானது ஒரு மைல்கல் ஆண்டாக அமையும் எனவும், பூமியின் எட்டு பில்லியன் மக்கள் பிறப்பதை நாம் எதிர்பார்க்கிறோம் என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

இது நமது பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்கும், நமது பொதுவான மனிதாபிமானத்தை அங்கிகரிப்பதற்கும், ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்ட மற்றும் தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதங்களை வியத்தகு முறையில் குறைத்துள்ள ஆரோக்கியத்தின் முன்னேற்றங்களைக் கண்டு வியப்பதற்கும் ஒரு சந்தர்ப்பமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அமரர் அமரகீர்த்தியின் மனைவிக்கு நன்கொடை

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தின் பின்னர் இந்த பணத்தை ஜனாதிபதி கையளித்தார்.

## வவுனியா செல்கிறார் ஜனாதிபதி

இதனையடுத்து மூன்று முறிப்பு பகுதியில் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டு திறக்கப்படாத நிலையில் உள்ள விசேட பொருளாதார மத்தி நிலையத்தினை திறக்கவுள்ளதுடன் வட மாகாணத்திற்கான ஜனாதிபதி செயலகத்தின் இணைப்பு செயலகமொன்று வைரவபுளியங்குளம் ரயில்நிலைய வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## ஊழலுக்கு மத்தியிலேயே தெரிவாகின்றனர்

பொருளாதாரத்தை தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாதென அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனாலேயே 21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது எனவும் தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களம் மீது பல குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. பல குற்றச்சாட்டுகள் உண்மையானவை. நாட்டில் உள்ள ஊழல் செயற்பாடுகள் பாரதூரமானவையாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் கறுப்புப்பண கும்பலும், ஊழல்வாதிகளும் இருக்கின்றனர் என்றார்.

முன்னாள் ஜனாதிபதியும் இவற்றுக்கே முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தேர்தலுக்கு பணம் வழங்கி உதவியவர்கள், வரி நிவாரணங்களை வழங்க வேண்டுமென அழுத்தம் வழங்கினார்கள் எனவும் தெரிவித்தார்.

இதுபோன்ற செயற்பாடுகளால் பாராளுமன்ற ஜனநாயகத்தை முன்கொண்டு செல்ல முடியாது. எனவே இவற்றை ஒழிக்க வேண்டும். இதன்படி ஊழலுக்கு எதிரான சட்டமொன்றை தயாரித்து வருகிறோம். இதனூடாக, புதிய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு எதிர்காலத்தில் நியமிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபைத்...

அத்துடன் உரிய நேரத்தில் தேர்தலை நடத்தி மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர்.

தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். மேலும், கலந்துரையாடலின் முடிவில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் எழுத்து மூலமான கோரிக்கை அடங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கையளித்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், உரிய நேரத்தில் தேர்தலை நடத்த தான் தயாராக இருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளதுடன், எந்தகைய அரசியல் அழுத்தங்களுக்கும் தான் அடிபணிந்து பணியாற்றும் நபரல்ல என்றும் தெரிவித்துள்ளார்.



பா. நிரோஷ்
ddnirosh@gmail.com

# திருத்தினால் மட்டுமே ஆதரவு



சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு -செலவு திட்டத்தில் பல திருத்தங்களை மேற்கொண்டால் மாத்திரமே ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அதற்கு ஆதரவாக வாக்களிக்க முடியும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டுமென வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் போன்ற நட்டமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதில் பிரச்சினை இல்லை. ஆனால் டெலிகொம் நிறுவனம் நட்டமடையும் நிறுவனமல்ல. இவ்வாறு இருக்கும்போதே எந்த அடிப்படையில் அதனை விற்பனை செய்ய அரசாங்கம் பார்க்கிறது எனவும் கேள்வி எழுப்பினார்.

அதுபோல, இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்திலும் எந்தவொரு பிரச்சினைகள் இல்லை. குறிப்பாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை வழங்குவதாகக் கூறி லிற்றோ நிறுவனத்தையும் வழங்க பார்க்கிறார்கள். இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென ஆளுங்கட்சியினருக்கு தலை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தில்

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் பேசவில்லை

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் நாளாந்தம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வாழ முடியுமா என கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் வரவு-செலவு திட்டத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்றார்.

வரவு- செலவு திட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தால் இரு கரங்களையும் உயர்த்தி வரவு -செலவு திட்டத்துக்கு ஆதரவளிப்பேன். எனவே வரவு -செலவு திட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மலையக மக்கள் காரணமல்ல. இவர்களால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படவும் இல்லை. ஜே.வி.பி கலவரம், யுத்தம், கொரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட மோசமான காலங்களில் கூட மலையக மக்கள் அர்ப்பணிப்புடன் வேலை செய்தார்கள். வரவு- செலவு திட்டத்தில் விவசாயம் தொடர்பில் அரசாங்கம் பேசுகின்றது. ஆனால், பதுளை மடுல்சீம பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான தோட்டமொன்றில் வாழைக் கன்றுகளை நட்டதற்காக அவற்றை தோட்ட நிர்வாகம் பிடிங்கி வீசியுள்ளது. பெருந்தோட்டங்களில் வேறோர் அரசாங்க நிர்வாகம் காணப்படுகிறது என்றார்.

மலையக காணிகள் வெளியாறுக்கு வழங்கக்கூடாது. அதிபர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என மலையகத்தில் உள்ளவர்களுக்கு காணிகள் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். மலையகக் காணிகள் பகிர்ந்தளிக்கும்போது இனவாதமில்லாது அவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மலையக மக்கள் நன்று தெரியும்.

பெருந்தோட்ட காணிகளை பெருந்தோட்ட நிறுவனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெருந்தோட்ட நிறுவனங்கள் தோட்டங்களை காடாக்கியுள்ளன. இதனால் சிறுத்தைகளும், யானைகளும் தோட்டங்களுக்கு வந்துள்ளன எனவும் தெரிவித்தார். பெண்கள் உரிமைகள் தொடர்பில் பேசுகிறார்கள். ஆனால் பெருந்தோட்டங்களில் பெரும்பான்மையாகப் பெண்களே வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை என்றார்.



பிள்ளைப்பருவ கல்வியை முறைமைப்படுத்தும்

# சட்டக் கட்டமைப்பொன்று செயற்படுவது அவசியம்

## சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியத்தில் அவதானம்



இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் தொடர்பில் சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம் கவனம் செலுத்தியது. சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன தலைமையில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் பல்வேறு நிறுவனங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் மற்றும் சிக்கல்களை இனங்கண்டு சம்பந்தப்பட்ட தரப்பினரை அணுகி அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நாட்டிலுள்ள சிறுவர்களுக்கு தரமான கல்வியைப் வழங்குதல், உரிய சுகாதாரப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல், தற்பொழுது காணப்படும் வளங்கள் மற்றும் அதிகாரிகளின் திறன்களை அதிகரித்தல், சமுதாயஞ்சார் சீர்திருத்தம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடும் போது கருத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, முன் பிள்ளைப்பருவ கல்வி தொடர்பான தேசிய கொக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இங்கு புலப்பட்டதுடன், மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் ஒருமைப்பாடுகளை கருத்தில் கொண்டு முன் பிள்ளைப்பருவ கல்வியை முறைமைப்படுத்துவதன் அவசியத்தை பூர்த்திசெய்யும் நோக்கில் சட்டக்கட்டமைப்பொன்றில் செயற்படும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துவதற்கான 5 ஆண்டு கால செயற்பாட்டுத் திட்டம் (2023 - 2027) தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

> **சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துவதற்கான 5 ஆண்டு கால செயற்பாட்டுத் திட்டம் (2023 – 2027) தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது**

தேர்தல்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின்

# தவிசாளர்களை நீக்க அரசாங்கம் முயற்சி

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நடவடிக்கை எடுத்து வருவதாலும், போராட்டங்கள் தொடர்பில் கரிசணையுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் செயற்பட்டு வருவதாலும் இருவரையும் அரசாங்கம் அந்தப் பதவிகளில் இருந்து விலக்குவதற்கு முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதில் நான் காலதாமதங்களை ஏற்படுத்தி வருவதாக பத்திரிகை ஒன்று போலியான செய்தியை வெளியிட்டு எனது சிறப்புரிமையை மீறியுள்ளது. எனவே, இந்த செய்தியை எழுதியவர்களை சிறப்புரிமைகள் குழுவுக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் தவிசாளர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் முயல்வதாகவும் தெரிவித்தார்.



# அமெரிக்க அதிகாரிகள் குழு சபாநாயகர் சந்திப்பு

ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவின் (Senate Foreign Relations Committee) பணியாட்தொகுதியின் அதிகாரிகள் குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தனர்.

இந்தக் குழுவினர் பாராளுமன்றத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்ததுடன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இதன் போது இவர்கள் பாராளுமன்றத்தின் குழு முறைமைகள் குறித்து சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் விரிவாகக் கலந்துரையாடினர். அத்துடன், பாராளுமன்றத்தின் அமைவிடம், வரலாறு மற்றும் கட்டட வடிவமைப்புத் தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் இக்குழுவினருக்கு விளக்கமளித்தார். இதன் பின்னர் இந்தக் குழுவினர் சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் பகல் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டனர். அத்துடன், இந்தச் சந்திப்பில் யுஎஸ்எயிட் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் (இலங்கை மற்றும் மாலைதீவு) கப்ரியால் பெர்னாந்து க்ரேவ் மற்றும் NDI நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் துசிதா பிலபிட்டிய உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.



# 2023 இல் அரச ஊழியர்களுக்கு ஆப்பு

## சம்பளம், மேலதிகக் கொடுப்பனவுகளில் கை வைத்தார் ரணில்

பா.நிரோஷ்



வரவு- செலவு திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக, அடுத்த வருடம் அரச ஊழியர்களுக்கான சம்பளம், மேலதிக கொடுப்பனவுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறைத்துள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

காகத்தின் கூட்டில் முட்டையிட்ட ரணில் என்கிற குயிலால் சரியான கொள்கைளை நடைமுறைப்படுத்த முடியாது. அதேபோல் சிக்கியிருக்கும் வலையில் இருந்து மீள முடியாது என்பதும் ஜனாதிபதி ரணில் சமர்ப்பித்த வரவு-செலவு திட்டத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டுமெனவும், இலஞ்ச, ஊழல் செயற்பாடுகளை ஒழிக்க வரவு- செலவு திட்டத்தில் ரணில் வாய்திறக்கவில்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (15) வரவு -செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் வரவு-செலவு திட்டங்களில் நல்ல விடயங்கள் இருக்கின்றன. ஆனால் சமூகப் பாதுகாப்பு, நீதி, அரசியல் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஏன் எதனையும் குறிப்பிடவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்கும்போது நாட்டில் ஏழ்மையின் நிலை 11 சதவீதமாக இருந்தது. ஆனால் தற்போது 40 சதவீதமாக அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூறுகிறது. நாளொன்றுக்க தேவைப்படும் 2030 கலரிகளை இந்த ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் எவ்வாறு பெற்றுக்கொள்வார்கள்? எனவும் கேட்டார்.

பாதுகாப்புத் தரப்பினருக்கு செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. தனது செலவுகளையும் குறைத்து முன்னுதாரணங்களை நாட்டுக்கு ரணில் வழங்கியிருக்கலாம். ஆனால் அதனை அவர் செய்யவில்லை. எதிர்காலத்தில் அமைச்சுப் பதவிகளை பெறுவதற்குப் வரிசை ஏற்பட்டுள்ளது. நியமிக்கப்பட உள்ள புதிய அமைச்சர்களுக்கு வாகனங்கள், அலுவலகங்கள் வழங்கப்பட வேண்டும். இதனால் செலவுகள் மேலும் அதிகரிக்கும் என்றார்.

> **காகத்தின் கூட்டில் முட்டையிட்ட ரணில் என்கிற குயிலால் சரியான கொள்கைளை நடைமுறைப்படுத்த முடியாது. அதேபோல் சிக்கியிருக்கும் வலையில் இருந்து மீள முடியாது என்பது பட்ஜெட்டின் உரையின் ஊடாக உறுதியானது.**

# பிள்ளைகள் மீது பெற்றோரின் கவனம் முழுமையாக இருக்கவேண்டும்


அபு அலா

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற இக்காலகட்டத்தில், பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் மீது முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டும் என கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் தொழில் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி கிரிதன் சுகந்தினி தெரிவித்தார்.

'போதையற்ற மாணவர்கள் சமுதாயத்தை உருவாக்கல்' என்ற தொனிப்பொருளில், இலங்கை காப்போம் நிறுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (13) திருமலை வளாக சித்த மருத்துவ பிரயோக விஞ்ஞான பீட தொழில் நுட்பவியல் கருத்தரங்கு மண்டபத்தில், காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பது மட்டுமே பெற்றோர்களின் கடமையல்ல. தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளையும் அவர்கள் யாருடன் நட்பு ரீதியான தொடர்புகளை வைத்துள்ளார்கள் என்பதையும் அவதானிக்க வேண்டும். தவறும் பட்சத்தில், பிழையான நண்பர்களின் உறவால், பிள்ளைகள் வழிதவறிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

தமது பிள்ளைகளை பாதுகாப்பது ஆசிரிய சமூகம் மாத்திரமல்ல என்பதை பெற்றோர் புரிந்துகொண்டு, தங்களின் பிள்ளைகள் மீது முழுமையான கவனத்தைச் செலுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும் என்றார்.



கடற்கரைகளில் பாம்புகளும் ஆமைகளும்

# அவதானமாக இருக்கவும்!

பாரூக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக, மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய கல்லாறு முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தின் சிறிய முகத்துவாரங்களும் வெட்டப்பட்டன.

இதனால் கடலை நோக்கி பெருக்கெடுத்து ஓடும் ஆறு, கடலுடன் கலக்கும் போது, ஆற்றில் வளரும் சல்லுத் தாவரங்களுடன் பாம்பு, ஆமை போன்ற ஊர்வனவும் கரைகளில் ஒதுங்கி அதிகளவில் நடமாடுகின்றன.

இவை, கடற்கரையோரங்களில் காணப்படும் படகு, கற்கள், நீர் வடிந்தோடும் துவாரங்கள் போன்றவற்றுக்குள் பதுங்குவதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். இதனால் மருதமுனை, பெரியநீலாவணை, காரைதீவு, கல்முனை, நிந்தவூர் போன்ற பிரதேச கடற்கரைக்கு செல்பவர்கள், மிக அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.



# மட்டக்களப்பில் 48 மணி நேரத்தில் மூவர் தூக்கில் தொங்கினர்

வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 48 மணி நேரத்தில், மாணவி உட்பட மூவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைக்கல்லாறில் 22 வயதுடைய சுரேஸ் விதுசன் என்னும் இளைஞன் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் பாலிப்போடி நவரெத்தினம் என்ற 64 வயதுடைய நபர், தனது கொட்டிலில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவில் உள்ள வீட்டில் ஞா. டிலானி என்ற கல்வியல் கல்லூரி மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சேதனப்பசளை, நாற்றுகள் வழங்கி வைப்பு



எச்.எம்.எம் பர்ஸான்

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் சேதனப்பசளை மற்றும் நாற்று வகைகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (14) நடைபெற்றது.

ரம்யலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் தியாவட்டவான் கிராம சேவை பிரிவிலுள்ள 100 பயனாளிகளுக்கு பசளைகளும் நாற்று வகைகளும் வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம் முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ரம்ய லங்கா நிறுவனத்தின் பிரதிநிதி அஷ்ஷெய்க் எம். முஸ்தபா (மொழி பெயர்ப்பாளர்), மயிலங்கரச்சை பௌத்த விகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கி வைத்தனர்.

# ஆழ்கடலில் எரிவாயு கசிவால் மீனவர் படுகாயம்

எச்.எம்.எம் பர்ஸான்

ஆழ்கடலுக்கு இயந்திரப் படகில் மீன்பிடிக்க சென்ற ஓட்டமாவடி, மீராவோடை பகுதியைச் சேர்ந்த மீனவர், எரிகாயங்களுடன் நேற்று (15) வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இயந்திரப் படகிலிருந்த எரிவாயு சிலிண்டரில் உணவு சமைத்துக் கொண்டிருந்த போது, எரிவாயு கசிவு ஏற்பட்டு மீனவர் மீது தீபற்றியதாக அவருடன் சென்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த ஏனைய மீனவர்கள், தீபற்றிய மீனவரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கல்முனை மாநகர சபையால் பிடிக்கப்பட்ட

# கட்டாக்காலிகள் தொடர்பான அறிவித்தல்

பாரூக் ஷிஹான்

கல்முனை மாநகர எல்லைக்குள் கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் குறித்து, எமது ஊடகம் அண்மையில் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மாநகர சபை துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, வீதிகள், சந்தைகள், மைதானங்கள் போன்றவற்றில் இடையூறாக காணப்பட்ட கட்டாக்காலி கால்நடைகள், கல்முனை மாநகர சபையால் கைப்பற்றப்பட்டு, மாநகர சபைக்கு சொந்தமான காணியில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த நான்கு நாள்களாக மாநகர சபையினரால் பிடிக்கப்பட்டு, மீட்கப்படாத மாடுகள் தொடர்பிலான அறிவித்தல்களும் பள்ளிவாசல் ஒலிபெருக்கி மற்றும் ஊடகங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில், இவ்வாறு மாடுகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் மாநகர சபையால் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. இனிவரும் காலங்களில் இதற்கு மேலதிகமாக, நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறமை குறிப்பிடத்தக்கதாகும்.



இனப்பிரச்சினைக்குத் தீர்வு குறித்து ரணிலுடன் பேசும்போது

# அமெரிக்காவை மத்தியஸ்தத்துக்கு அழைக்க வேண்டும்

க. அகரன்

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழர்களின் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கு முன்னர், ரணிலின் அரசியல் வரலாற்றில், தமிழர்களுக்கு எதிரான துரோகச் செயல்களை நினைவுகூர வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை காப்பாற்றுவதற்காக, பணக்கார நாடுகளிடம் உதவிகளைப் பெறுவதற்காக, தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக இப்போது உலகுக்குக் காட்டுவதற்கான ரணிலின் நாடகமாகவே இந்தப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பைப் பார்க்க வேண்டும். எனவேதான், பேச்சுவார்த்தையின்போது, அமெரிக்கா-ஐரோப்பிய ஒன்றியம் இணைந்த அணிகளை மத்தியஸ்தர்களாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொட்டகையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது;

நல்லாட்சி அரசாங்கத்தில், ரணிலால் கையாளப்பட்ட நல்லிணக்கக் கொள்கையை நினைவுகூருங்கள்.

1. தமிழர் தாயகத்தில் 1,000 பௌத்த ஆலயங்களைக் கட்டுவதற்கு பட்ஜெட்டை நிறைவேற்றினார். இது தமிழர் தாயகத்தில் பல இடங்களிலும், பௌத்த ஆலயங்களைக் கட்ட இடமளித்தது. குறிப்பாக, குருந்தூர் மலையிலும் நடக்கிறது.

2. வவுனியா, நெடுங்கேணியில் 4,000 சிங்களவர்களிடம் தமிழர்களின் காணி உறுதிகள் கையளிக்கப்பட்டன.

3. தமிழர்களின் தாயகத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களாக பிரித்து ஏக்கியராஜ்ஜியவை அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ரணில் கட்டளையிட்டார். இவ்வாறு அவரது நரித்தன அரசியல் தொடர்ந்தது.

தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அரசியல் சுதந்திரத்தைத் தருவதற்கு ஸ்ரீலங்கா அரசு ஒருபோதும் இடமளிக்காது. ஆனால், அமெரிக்காவை மத்தியஸ்தராக வைத்துக்கொண்டு, தமிழர்களை சுதந்திரமான மக்களாக வாழ விடுவதற்கு ரணிலும் சிங்கள புத்திஜீவிகளும் என்றைக்கும் தயாராக இல்லை என்பதை, அவர்களை மத்தியஸ்தராக அழைப்பதன் மூலம் உலகுக்கு காட்ட முடியும் என்றார்.

# கார்த்திகை மாத மர நடுகை



மன்னார் நிருபர்

'மரம் நாட்டுவோம்; எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில், வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் மன்னார் பரிகாரி கண்டல் அ.த.க பாடசாலையில் மர நடுகை திட்டம் நேற்று (15) நடைபெற்றது. நிகழ்வுக்கான அனுசரணையை சுவிஸ் நாட்டில் வசிக்கும் அகிலனால் வழங்கப்பட்டது. அனுசரனையாளரின் பேரன் சிவாலயர் கமவிதானை நடராஜாவின் நினைவாக, பாடசாலை வளாகத்தில் 100 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.



# மாவீரன் பண்டாரவன்னியன் பண்பாட்டு பெருவிழா

செ. கீதாஞ்சன்

கொழும்பு தமிழ்ச் சங்கமும் வன்னி கலை பண்பாட்டு கூடமும் இணைந்து நடத்திய மாவீரன் பண்டாரவன்னியன் பண்பாட்டு பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (13) வவனியா நகர சபை மண்டபத்தில், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்று ஆய்வுரையை வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரையும் அடங்காப்பற்றும் தமிழர் வரலாறும் என்ற ஆய்வுரையை வரலாற்ற ஆய்வாவாளரும் ஆசிரியருமான மா. மோகனகிருஸ்ணன் ஆகியோர் நிகழ்தினார்கள்.

துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் மாலினி முகுந்தன், கொழும்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் மா. கணபதிப்பிள்ளை, இலக்கியக்குழு தலைவர் மதுசூதனன், வவுனியா தமிழ்ச் சங்க தலைவர் தமிழருவி சிவகுமாரன், வவுனியா தெற்கு தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் த. நிறைமதி எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

மண்ணை இழந்தால் மொழி, கலை, கலாசாரம் அழியும்

# இதற்காகவே போராளிகள் போராடினார்கள்

## சட்டத்தரணி கே.வி தவராசா

க. அகரன்



போராளிகள் நலன்புரி சங்கம் உருவாக்கப்படுகிறது. இந்தப் போராளிகள் போராடியது எல்லாம் அவர்களது சொந்த நன்மைக்காக இல்லை என்பதை எமது சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த மண்ணுக்காக, தாய் மொழிக்காக, இனத்துக்காக போராடினார்களோ, அவர்களை இப்போது சமூகம் மறந்து விட்டது; இது தான் உண்மை என தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளை தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.வி தவராசா தெரிவித்தார்.

வவுனியாவில் முன்னாள் போராளிகள் நலன் பேணும் அமைப்பின் ஆரம்ப நிகழ்வில், ஞாயிற்றுக்கிழமை (13) கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராளிகள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன். அவர்களது தேவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று அம்பாறை பறிபோய்விட்டது. வவுனியா, முல்லைத்தீவு என எமது மண்ணை இழந்து கொண்டு போகின்றோம். எங்கள் மண் இழக்கப்பட்டுக்கொண்டே இருந்தால் எங்களது மொழி, கலை, கலாசாரம் அழியும். இதை பாதுகாக்கவே போராளிகள் போராடினார்கள்.

முன்னாள் போராளிகளான இந்தச் சங்கத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். எங்களுக்காக, உரிமைக்காக போராடியவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனது மனைவி இப்போது உயிருடன் இல்லை. 'கௌரி சங்கரி அறக்கட்டளை' நிறுவி, எமது இனத்துக்காக உதவி செய்வேன் எனத் தெரிவித்தார்.

நல்லூரில் மக்கள் அஞ்சலிக்காக

# மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலாயத்துக்கு முன்பாக, மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாகவும் நவம்பர் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையில் இங்கு மக்கள் ஒன்று திரண்டு, அஞ்சலி செலுத்தமுடியும் எனவும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் தெரிவித்தார்.

திலீபனின் நினைவாலாயத்துக்கு முன்பாக, மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில், உரிய அனுமதிகளை பெற்று, கல்வெட்டுகள் வைக்கப்படவுள்ளன. உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கு இருக்கும் உரிமையின் அடிப்படையில், எமது சகோதர சகோதரிகளை நினைவு கொள்வதை யாரும் தடுக்க முடியாது என்றார்.

# ‘48’யை பூர்த்தி செய்ய கோரிக்கை

■ துவாரகஷான்

விந்துலை- கவுலினா தோட்டத்தில் 2013ஆம் ஆண்டு வீசிய பலத்த காற்றினால் 48 வீடுகளுக்கு சேதமடைந்தன. இந்நிலையில், அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான பணிகள் அப்போதைய அமைச்சர் பழனி திகாம்பரத்தால் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தால் 48 தனி வீடுகளுக்கான கட்டுமாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதன் பின்னர் வந்த புதிய அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டாலும் இடைநிறுத்தப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் எந்தவொரு பணியும் முன்னெடுக்கப்படவில்லை.





இவ்வாறு அமைக்கப்பட்ட தனி வீடுகள் தற்போதும் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றன.

அனர்த்தத்தை எதிர்நோக்கி 9 வருடங்கள் கடந்த போதிலும் இன்னும் இம்மக்கள் குடியேற முடியாத சூழ்நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

வீடுகள் அமைக்கப்பட்ட பகுதிகள் காடுகளாக மாறியுள்ளதுடன், அப்பகுதி மக்கள் நடமாட முடியாத இடமாக காணப்படுகின்றது.

எனவே, குறைபாடுகளுடன் காணப்படும் வீடுகளை புனரமைப்பு செய்து கையளிக்குமாறு இத்தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## இடையில் நின்ற வீதி புனரமைப்பு

■ நவி

கண்டி -கலஹா நகரில் இருந்து ஹேவாஹெட்ட நகருக்குச் செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் குறித்த வீதியில் வாகனங்கள் பயணிக்க முடியாத அளவுக்கு குண்டும் குழியுமாக மாறியுள்ளன.

வீதி புனரமைப்புக்கு கொண்டு வரப்பட்ட மெட்டல் உள்ளிட்ட பொருட்கள் ஆங்காங்கே போடப்பட்டிருந்தன. அவை தற்போது பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் விரைவாக குறித்த வீதியைப் புனரமைத்து தருமாறு சாரதிகளும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கித்துல் கள்ளுக்கும் சட்ட நிவாரணம் வேண்டும்

■ பாலித ஆரியவன்ஸ

கஞ்சாவுக்கு முன்மொழியப்பட்டுள்ள சட்ட நிவாரணத்தை கித்துல் கள் உற்பத்திக்கும் வழங்குமாறு ஊவா மாகாண கித்துல் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல, பசறை, ஊவா பரணகம, லுணுகல, வியலுவ, சொரணாதொட்ட, ஹல்துமுல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் பல பகுதிகளில் கித்துல் உற்பத்தி பாரியளவு முன்னெடுக்கப்படுகின்றது.

ஊவாவில் கித்துல் வளரும் பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான கிராம மக்கள் கித்துல் கள்ளை அருந்தும் பழக்கத்தை பழங்காலத்திலிருந்தே கொண்டிருப்பதுடன் இது ஆரோக்கியமான பானம் என்ற நம்பிக்கை அவர்களிடம் காணப்படுகிறது.



ஆயுர்வேதத்தின் படி, கித்துல் கள், மூல நோய் உள்ளிட்ட பல நோய்களுக்கு சிறந்தது என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், கித்துல் கள் தயாரிப்பதற்கு சட்டப்பூர்வ அனுமதி இல்லை எனக் கூறி பொலிஸார் தொடர்ந்து கைது செய்வதாக கித்துல் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மதுபானத்தின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளதுடன், மதுவை விட கித்துல் கள் ஆரோக்கியமானது என்பதால், கித்துல் கள்ளுக்கு சட்டப்பூர்வ அனுமதி வழங்க வேண்டும் என கோருகின்றனர்.

## இராகலை நகரில் கட்டாக்காலிகள் தொல்லை

■ ஆ.ரமேஸ்

இராகலை நகரில் கட்டாக்காலிகளால் வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இராகலை நகரில் திரியும் கட்டாக்காலிகளான நாய்கள், மாடுகள் கடைகளில் பார்வைக்கு தொங்கவிடப்படும் வாழைப்பழங்கள் உள்ளிட்ட பொருட்களை இழுத்து செல்வதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.



இராகலை நகரமானது, வலப்பனை பிரதேச சபைக்குரிய நகரம் என்பதால் உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்குமாறும் கட்டாகாலிகளின் நடமாட்டத்தை தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



**பரிசளிப்பு விழா**

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பன்மூர் தமிழ் மஹா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அதிபர் டி. சண்முகநாதன் தலைமையில் ஹட்டன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதிகளாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஆர். சத்தியேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லக்ஷ்மி பிரபா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கி வைத்தனர். பி. கேதீஸ்



**கௌரவிப்பு...**

விளையாட்டு வீரர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆன்மீகவாதிகள் உள்ளிட்டோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் உடப்புஸ்ஸலாவை- எமஸ்ட் தோட்ட ஜெட்லைன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (ஆ. ரமேஸ்)

## 44 மாணவிகள் மயங்கி விழுந்தனர்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை- கும்பியாங்கொடை சுஜாதா மகளிர் கல்லூரியின் மாணவிகள் 44 பேர் நேற்று (15) காலை திடீர் சுகவீனம் காரணமாக மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிகளில் சிலர் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியைச் சேர்ந்த மாணவிகள் என்பதுடன், வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று (15) காலை இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியிலும் கலந்துகொண்டு வெற்றிப்பெற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இவர்களின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக நேற்றுக் காலை பாடசாலையில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இதில் கலந்துகொண்ட போதே, மாணவிகள் மயக்கமடைந்துள்ளனர்.

இதனையடுத்து உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் மாணவிகளின் உடல் நிலை பாரதூரமாக இல்லை என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜெரி மோப்பம் பிடிக்க கம்பளையில் 8 பேர் கைது

■ நவி

போதைப் பொருள் வர்த்தகம், விநியோகம் என்பவற்றை முன்னெடுத்ததாகக் கூறப்படும் போதைப் பொருள் மத்திய நிலையமொன்று கம்பளை பொலிஸாரால் நேற்று (15) காலை சுற்றிவளைக்கப்பட்டதுடன் 8 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

31 வயதான ஹோட்டல் உரிமையாளரும் போதைப் பொருள்கொள்வனவுக்கு வருகைத் தந்திருந்த 21 தொடக்கம் 42 வயதுக்கு இடைப்பட்ட 7 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

எவருக்கும் இலகுவில் சந்தேகம் ஏற்படாத வகையில் ஹோட்டல் ஒன்று போல குறித்த இடம் நடத்திச் செல்லப்பட்டதாகவும் இந்த இடத்துக்கு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் அதிகமாக வந்து செல்கின்றமை தொடர்பில் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்புக்கு அமைய கம்பளை ஊழல், ஒழிப்பு பிரிவின் அதிககாரிகளால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.



இந்த ஹோட்டலின் மேல் மாடியில் உள்ள 3 அறைகளில் இந்த போதைப் பொருள் வர்த்தகம் முன்னெடுக்கப்பட்டு செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் நகரை அண்மித்த பகுதிகளைக் கண்காணிப்பதற்காக பல இரகசிய ஜன்னல்களும் அமைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த ஹோட்டல் சுற்றிவளைக்கப்பட்டதுடன் இதன்போது பல்வேறு வகையான போதைப் பொருள்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 1 இலட்சத்து 6ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கம்பளை பொலிஸாரின் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காக நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் ஜெரி மோப்ப நாயும் கொண்டு வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணிக்கக்கல் அகழ்ந்த 19 பேர் கைது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை- மஹாஎலிய வனப்பகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 19 பேர் மஸ்கெலியா பொலிஸ் விசேட படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (15) காலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொகவந்தலாவை, நோர்வூட், பலாங்கொடை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை பொகவந்தலாவை பொலிஸாரிடம் ஒப்படைக்காமல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக ஹட்டன் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### பெருந்தோட்ட சேவையாளர்களின்

## சம்பளத்தை அதிகரிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

■ எம்.பிரபா

இலங்கையின் பெருந்தோட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் 30 சதவீதத்தினால் உயர்த்தப்படுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொருளாளர் தெரிவித்தார்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் என்பனவற்றுக்கு இடையில் குறித்த கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் தோட்ட சேவையாளர் சங்க பொருளாளர் மாரிமுத்து சுதாகர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 25 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் . மிகுதி 5 சதவீதம் 2024ஆம் ஆண்டில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் வீட்டு வாடகை கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வருடாந்த சம்பள உயர்வை வருடத்திற்கு ஆகக் குறைந்தது 100 ரூபாவால் அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர்களின் ஏனைய நலன்புரி விடயங்களும் உள்ளடக்கப்பட்டே ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டுள்ளது..

பொருளாதார நெருக்கடி காரணமாக பெருந்தோட்ட உத்தியோகத்தர்கள் 70 சதவீத சம்பள அதிகரிப்பை கோரியிருந்த போதிலும், 30 சதவீத அதிகரிப்பிற்கே இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார்.

# நிவாரணங்களை விழுங்கி யோசனைகளுக்குள் முடங்கிய 2023 பட்ஜெட்

நாட்டின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 75 சதவீதமான மக்கள், நிவாரணங்களை நம்பியே வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். அந்தளவுக்கு பொருளாதார நெருக்கடி தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றது. இடையிடையே அதிகரிக்கப்படும், பொருட்களின் விலைகள், சேவைக்கட்டணங்களால் தலையைத் தூக்கமுடியாதுள்ளனர்.

இவ்வாறான நெருக்கடிக்கு மத்தியில்தான், 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எவ்விதமான ஆரவாரமோ, சலசலப்போ இல்லாமல், நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் நவம்பர் 14ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. ஆக, ஜனரஞ்சகமான யோசனைகளோ, மக்களை கவர்ந்திழுக்கும் அறிவிப்புகளோ பட்ஜெட்டில் இல்லை.

இந்த பட்ஜெட்டின் ஊடாக, தங்களுக்கு ஏதாவது கிடைக்குமென எதிர்பார்த்திருந்திருந்த சகல துறைகளையும் சார்ந்தவர்களின் கண்களில் மணல் விசிறப்பட்டுள்ளது மட்டுமே தெட்டத்தெளிவாக இருக்கிறது. அரசாங்கத்தின் மீதிருந்த கொஞ்ச நம்பிக்கையையும் பட்ஜெட் யோசனைகள் சிதறடிக்கச்செய்துவிட்டன.

யாரையும் எதிர்பார்க்காது சொந்தக்காலில் நிற்கவேண்டும்; ஆக, அரசாங்கத்தின் நிவாரணங்களுக்கு கையேந்துபவர்களாக இருக்கமுடியாது. உழைத்து முன்னேற வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை. எனினும், வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், அதற்குரிய சம்பளம் கிடைக்கும் வகையிலும் ஆவன செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்ததாகும்.

“கொரோனாவுடன் மக்கள் பாதிக்கப்பட்டுவிட்டனர்; பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு எந்தவிதமான பதிலும் பட்ஜெட்டில் இல்லை” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், “மக்களுக்கு நம்மை வழங்காத பட்ஜெட்” என உதய கம்மன்பிலவும், “பெருந்தோட்ட மக்களுக்கு எதுவுமில்லாத பட்ஜெட்” என மனோ கணேசனும், “குறிப்பிட்டுக் கூற எதுவுமில்லை” என சுமந்திரனும் விமர்சித்துள்ளனர்.

நிவாரணங்களை எதிர்பார்க்கக்கூடாது என்பது அரசாங்கத்தினதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் கொள்கையாக இருந்தால், மக்களின் மீது மேன்மேலும் சுமையை சுமத்தக்கூடாது. சுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாதபோதுதான் கையேந்தும் நிலைக்குள் மக்கள் தள்ளப்பட்டுவிடுகின்றனர்.

அதேபோல, தேர்தல் காலங்களிலும் ஜனரஞ்சகமான அறிவிப்புகளை அரசாங்கம் விடுக்கக்கூடாது; நிவாரணங்களையும் வழங்கக்கூடாது. ஆட்சிப்பீடமேறினால், இவற்றையெல்லாம் செய்வேன் என ஒப்புதல் வழங்கவும் கூடாது. அவ்வாறு இருந்தால் மட்டுமே, வரிகள் அறவிடுவதை தவிர்க்கமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ளலாம்.

எனினும், வரிக்கு மேல் வரியை விதித்துக்கொண்டே இருப்பதை ஏற்கவும் முடியாது. 2023 பட்ஜெட்டின் பெரும்பாலான யோசனைகள், பொருளாதார மாற்றம் தொடர்பிலானவை. அத்துடன் புதிய சட்டங்களுக்கான தேவைகளும் உணர்த்தப்பட்டுள்ளன. ஆகையால், எதிர்காலங்களிலும் வரிகள் விதிக்கப்படாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை.

சாதாரண மக்களுக்கான நிவாரணங்களை விழுங்கி, யோசனைகளுக்குள் மட்டுமே முடக்கப்பட்ட பட்ஜெட்டாகவே 2023 பட்ஜெட்டை பார்க்கமுடிகிறது. ஆகையால், முன்மொழியப்பட்ட யோசனைகளையாவது துரிதப்படுத்தி, திண்டாடிக்கொண்டிருக்கும் மக்களை அதிலிருந்து மீண்டெழச் செய்வதற்கான வழிகளைத் துரிதப்படுத்தவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன் சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்கு தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, ‘கர்மா’ என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ராஜீவ் காந்தியின் படுகொலை:

# ஒரு கமெராவும் பேராசிரியர் சந்திரசேகரனும்

எம்.எஸ்.எம். ஐயூப்

தமிழ் நாடு, ஸ்ரீ பெரும்புதூரில் 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி, தேர்தல் பிரசார கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம்சாட்டப்பட்டு, மரண தண்டனையும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டு இருந்த ஏழு பேரில் ஆறு பேர், வெள்ளிக்கிழமை (11) இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்த பேரறிவாளன், கடந்த மே மாதம் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். அவரைப் போலவே தம்மையும் விடுதலை செய்யுமாறு, ஏனைய அறுவரும் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, அவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், இவர்கள் எழு பேரும், 31 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டே விடுதலை பெற்றுள்ளனர்.

ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக, ஆரம்பத்தில் 41 பேர் குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தனர். அவர்களுள் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவ்வமைப்பின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான், மகளிர் உளவுப் பிரிவுத் தலைவி அகிலா ஆகிய மூவரும் அடங்கியிருந்தனர். ஆனால், இவர்கள் கைது செய்யப்படவில்லை. 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற ‘ரிவிரெச’ (சூரிய கதிர்) இராணுவ நடவடிக்கையின் போது அகிலா கொல்லப்பட்டார். பிரபாகரனும் பொட்டம்மானும் இறுதிப் போரின் இறுதி நாளன்று, கொல்லப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட 41 பேரில், 11 பேர் கைது செய்யப்படும் நிலையில் தப்பிக்க முடியாததால், தற்கொலை செய்துகொண்டனர். சண்முகம் என்பவர் கைது செய்யப்பட்டதன் பின்னர், தூக்கிட்டுத் தற்கொலை செய்தார். இவ்வாறு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

ஏனைய 26 பேருக்கும் சிறப்பு நீதிமன்றம், 1998ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. பிரதிவாதிகள் இந்தத் தீர்ப்புக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர். அதனை விசாரித்த உச்சநீதிமன்றம், 1999ஆம் ஆண்டு, அவர்களில் 19 பேரை விடுதலை செய்தது. இவர்கள், ராஜீவ் காந்தி படுகொலையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை என்ற அடிப்படையிலும் அவர்களின் குற்றம் தொடர்பில் அவர்கள் அனுபவித்த எட்டு ஆண்டு கால சிறைத் தண்டனை போதுமானது என்ற அடிப்படையிலும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர், சண்முக வடிவேல் எனப்படும் இலங்கையராவார். அவர், படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களின் பணத்தை, தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு இருந்தார்.

மிகுதி எழுவரில் ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. இவர்கள் மூவரும் இலங்கையர்கள்.

முருகன், நளினி, சின்ன சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வரின் மரண தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. இவர்களில் முருகன், சாந்தன் ஆகிய இருவரும் இலங்கையர்கள்; நளினியும் பேரறிவாளனும் இந்தியர்கள்.

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான விசாரணை, குற்றப் புலனாய்வுத் துறையில் தொழில்சார் முறையில் மிகவும் நிபுணத்துவம் மிக்க விசாரணையாகவே கருதப்படுகிறது. விசாரணையாளர்கள் சில வாரங்களிலேயே மேற்படி 26 பேர் உட்பட, தடுப்புக் காவலில் தற்கொலை செய்து கொண்டவரையும் கைது செய்தனர். இந்த விசாரணையின் வெற்றியின் பெருமையின் பெரும்பகுதி, தமிழக அரசின் இரசாயன பகுப்பாய்வாளராக இருந்த பேராசிரியர் சந்திரசேகரனுக்கும் ஒரு கமெராவுக்குமே உரியது என்று கூறினால் அது மிகையாகாது.

தேர்தல் கூட்டத்தில், ராஜீவ் காந்திக்கு பலர் மலர்மாலை சூட்டினர். இதன் போதே குண்டு வெடித்து, அவர் உள்ளிட்ட 16 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஆனால் அது கண்ணிவெடியா, எறியப்பட்ட குண்டா, தற்கொலை குண்டா என்பது எவருக்கும் தெரியாதிருந்தது.

பேராசிரியர் சந்திரசேகரன் அந்த இடத்தைப் பரிசோதித்த போது, கீழே விரிக்கப்பட்டு இருந்த செங்கம்பளம் சேதமடைந்திருக்கவில்லை. அந்த இடத்தில் இருந்த ராஜீவ் காந்தியின் முகம், நெஞ்சு என்பன பலத்த சேதத்துக்கு உள்ளாகி இருந்தன. எனவே, குண்டுக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் எந்தவொரு தடையும் இருக்கவில்லை என்றும் ஆனால் குண்டுக்கும் செங்கம்பளத்துக்கும் இடையே தடை இருந்திருக்கிறது என்றும் சந்திரசேகரன் முடிவு செய்தார்.

சிதறிக் கிடந்த சடலங்களில், பெண் ஒருவரின் சடலம் இடுப்புப் பகுதியுடன் துண்டிக்கப்பட்டு இருந்தது. அது, சடலங்களில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட சடலமாக இருந்தது. சடலங்களிடையே ஓர் இடுப்புப் பட்டியின் முன்பாகம் இருந்தது. அதில் எரிந்த ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்து துகள்கள் இருந்தன. பட்டியில் சிக்கியிருந்த துணியும் துண்டிக்கப்பட்டு இருந்த உடலில் இருந்த துணியும் ஒன்றாக இருந்தமையால், அந்தப் பட்டி இந்தப் பெண்ணினுடையது என்று சந்திரசேகரன் முடிவு செய்தார். பட்டியின் பின்பாகம் அங்கே இருக்கவில்லை.

அதாவது, இந்தப் பெண்ணின் முதுகுக்கும் ராஜீவ் காந்தியின் நெஞ்சுக்கும் இடையே வெடிப்பு இடம்பெற்றிருக்கிறது. கம்பளம் சேதமடையாததற்குக் காரணம் அதுவே! குறித்த பெண் அணிந்திருந்த இடுப்புப் பட்டியில், வெடி மருந்து இருந்தமையால் அவளே குண்டுதாரி என சந்திரசேகரன் முடிவு செய்தார். ஆனால் யார் இந்தப் பெண்?

இந்தச் சம்பவத்தில் ஹரிபாபு என்னும் புகைப்படப்பிடிப்பாளரும் கொல்லப்பட்டார். கமெராவின் பட்டியை அவர் கழுத்தில் போட்டுக் கொண்டு இருந்தமையால், கமெரா அவரது சடலத்திலேயே சிக்கியிருந்தது. இந்திய இரகசிய பொலிஸ் அதிகாரியான டி.ஆர் காரத்திகேயனே விசாரணைக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் அந்தக் கமெராவில் இருந்த படங்களை பரிசோதிக்கும் போது, இறுதியாக எடுக்கப்பட்ட படத்தில், பெண் ஒருவர் மலர் மாலையை ஏந்தியவாறு, ராஜீவ் அருகே இருப்பது காணக்கூடியதாக இருந்தது.

உடைகளை ஒப்பிட்டுப் பார்த்த கார்த்திகேயன், அது மேற்படி குண்டுதாரி என்பதை அறிந்து கொண்டார். பின்னர் கைது செய்யப்பட்டவர்களை விசாரிக்கும் போது, அப்பெண் இலங்கையைச் சேர்ந்த ‘தானு’ என்று அழைக்கப்பட்ட தேன்மொழி ராஜரத்னம் அல்லது கலைவாணி ராஜரத்னம் என்று தெரிய வந்தது. கமெராவில் இருந்த படங்களில் ஒன்றில், மேடை அருகே ஆசனங்களில் அமர்ந்து இருந்தவர்களில் இரு பெண்களைத் தவிர ஏனையோரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் அடையாளம் கண்டனர்.

அக்காலத்தில், தெற்காசிய பிராந்தியத்தில் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பில் மட்டுமே, தற்கொலை குண்டுதாரிகள் இருந்தனர். எனவே, தமிழ் நாட்டில் இருந்த இலங்கையர்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அப்போது சங்கர் என்ற புலி உறுப்பினர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்த தொலைபேசி இலக்கங்களில் நளினி என்பவரின் இலக்கம் இருந்தது. அந்த இலக்கம் ஹரிபாபுவிடமும் இருந்தது. எனவே, இரகசிய பொலிஸ் அதிகாரியான டி.ஆர் காரத்திகேயன், ஹரிபாபுவின் படங்களை சங்கரிடம் காட்டினார். காங்கிரஸ் கமிட்டியால் அடையாளம் காண முடியாதிருந்த இரு பெண்களில ஒருவர் நளினி என்ற பெண் என்றும் மற்றவர் சுபா என்ற இலங்கையைச் சேர்ந்த பெண் என்றும் தெரிய வந்தது.

தம்மைப் பற்றி பொலிஸாருக்குத் தெரியவந்ததை அறிந்த நளினி, இலங்கையைச் சேர்ந்த புலிப் போராளியான முருகனோடு தலைமறைவானார். சுபாவும் சிவராசன் என்ற இலங்கையைச் சேர்ந்த புலிப் போராளியோடு தலைமறைவானார். சிவராசனே ஸ்தலத்தில் தாக்குதலை வழிநடத்தியுள்ளார். முருகனும் குண்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்துள்ளார். இந்த விவரங்கள் நளினியின் தாயையும் சகோதரனையும் கைது செய்து விசாரிக்கும் போது தெரிய வந்தது. சிவராசன் ஹரிபாபுவின் படமொன்றிலும் இருந்தார்.

நளினி, சிவராசன், சுபா, முருகன் ஆகியோரின் படங்கள் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டு, மக்களின் உதவி கோரப்பட்டது. முருகனின் படம் வாக்குமூலங்களின் படி வரையப்பட்ட ஒன்றாகும். பொதுமக்களிடம் கிடைத்த தகவல்களின்படி, முருகனும் நளினியும் கைது செய்யப்பட்டனர். சிவராசனும் சுபாவும் எண்ணெய் தாங்கியொன்றில் பதுங்கி கர்நாடகாவுக்குச் சென்றனர். அங்கு ஒரு வீட்டில் பதுங்கியிருந்த போது அந்த வீட்டுக்கு பால் கொண்டு வரும் ஒரு நபருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக, பொலிஸ் அதிரடிப் படையினர் அவ்வீட்டை முற்றுகையிட்டனர். அப்போது இருவரும் கைத்துப்பாக்கியால் சுட்டு, தற்கொலை செய்து கொண்டனர்.

வானொலி தகவல் பறிமாற்றங்களை பரிசோதிக்கும் போது, சிவராசனுக்கும் புலிகளின் தமிழ் நாட்டு தொடர்பாளர் ‘குண்டு’ சாந்தனுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களை பொலிஸாரால் ஒற்றுக் கேட்க முடிந்தது. அதன்படி, சிவராசனுக்கு அடைக்கலம் வழங்கிய ஜெயக்குமாரும் ரொபர்ட் பயஸ் ஆகிய இருவரும் அவர்களது உறவினர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களின் வாக்குமூலங்களின் படியே, சாந்தனும் பேரறிவாளனும் கைது செய்யப்பட்டனர். சாந்தன், தாக்குதலை திட்டமிட்டவர்களில் ஒருவர் எனக் கூறப்பட்டது.

ஹரிபாபுவின் கமெரா, பொலிஸாரிடம் சிக்காவிட்டால் சிலவேளை விசாரணைகள் வேறு திசையில் திரும்பி இருக்கலாம். அல்லது, சந்தேக நபர்களை கைது செய்ய நீண்ட காலம் எடுத்திருக்கலாம். அதற்குள் சிவராசன், முருகன், சாந்தன், சுபா உள்ளிட்ட புலி உறுப்பினர்கள், இலங்கைக்கு தப்பி வந்திருக்கலாம். எவ்வாறாயினும் ராஜீவ் காந்தி கொலையானது, புலிகளின் தலைவிதியை நிர்ணயித்த பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

## கடிதங்கள்

புதுக்குடியிருப்பு:

### சுண்ணாம்புகூளை வீதியின் அவலம்; மக்கள் அவதி



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட முதலாம் வட்டாரம் பகுதியில் அமைந்துள்ள சுண்ணாம்புகூளை வீதி, புனரமைக்கப்படாமையால், மழை வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால், வீதியால் பயணிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த வீதி, இதுவரை புனரமைக்கப்படாத காரணத்தாலேயே போக்குவரத்து செய்வதில் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மக்களிடம் வாக்கு கேட்பதற்காக வரும் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வட்டார உறுப்பினர் ஆகியோருக்கு நீண்டகாலமாக தெரியப்படுத்தியும் இந்த வீதி திருத்திக் கொடுக்கப்படவில்லை.

தற்போது இந்தக் கிராமத்துக்கான வீதியில் விளக்குகள் கூட பொருத்தப்படாத நிலை காணப்படுவதாகவும் யானைகள் வந்து, தற்போது அட்டகாசம் புரிந்து, தென்னம்பிள்ளைகள் மற்றும் வாழ்வாதாரம் தரும் மரங்ளையும் அழித்துவிட்டுச் செல்கின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியால், பாடசாலை மாணவர்கள் சீருடையுடனும் நோயாளர்கள் அவசரமாக மருத்துவமனைக்கும்கூட செல்லமுடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தமது குறைகளை நிவர்த்தி செய்யக்கூடியவாறு, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த மக்களால் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

– செ. கீதாஞ்சன்

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலனுக்காக புதிய திட்டங்கள்



இன்றைய பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், அதிகமாக பேசப்பட்டு வந்த விடயங்களில் ஒன்று ஏற்றுமதி வருமானம் ஆகும். இலங்கையை பொறுத்தவரையில் ஏற்றுமதி என்று சொன்னாலே எமது மனத்துக்கு வருவது தேயிலை ஏற்றுமதி தான். தேயிலை ஏற்றுமதி நாட்டுக்கு கணிசமான வருமானத்தை ஈட்டித் தரும் ஒரு துறையாகும்.

கடந்த காலங்களில் கொரோனா, அதைத் தொடர்ந்து வந்த இறக்குமதி தடைகள், டொலர் இல்லாத பிரச்சினை எனப் பல்வேறு விதங்களிலான பிரச்சினைகள் நிலவியதால், பெருந்தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் தேயிலை உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டன. அதனால் பெருந்தோட்டங்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதுடன் தொழிலாளர்களும் பெரிதும் பாதிப்படைந்தார்கள்.

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுப் பிரச்சினை ஒருபக்கம் இருக்க, உரப்பற்றாக்குறை மறுபக்கம், தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள் எனப் பல்வேறு பிரச்சினைகளைக் கடந்த காலங்களில் எதிர்கொண்டது பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம். இந்த நிலையில், தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்மேளனம் முன்னெடுத்து வருகின்றது.

இதனை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. காரணம், தற்போது நாடு எதிர்நோக்கும் இக்கட்டான சூழ்நிலையால் அதனை முன்னெடுப்பது கடினமானது. பெருந்தோட்ட கம்பனிகள், பல சவால்களை எதிர்நோக்குகின்றன. அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தற்போதைய நிலைப்பாடுகள் குறித்து, இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துக்கு புதிய தலைவராக நியமிக்கப்பட்ட சேனக அலவத்தேகம தெரிவித்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த புதிய தலைவர் சேனக்க அலவத்தேகம, 2023ஆம் ஆண்டு தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதே தமது நோக்கம் என்றார். மேலும், கிளைபோசெட் உரம் தடை செய்யப்பட்டதன் காரணமாக, தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முதலாளிமார் சம்மேளனத்தின் தகவல்களின் பிரகாரம், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக ஆயிரம் ரூபாய் நாளாந்த சம்பளத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில், இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை உட்பட சம்மேளனத்தின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை, 1992ஆம் ஆண்டு மூன்று இலட்சத்து 23 ஆயிரமாக இருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்து 20 ஆயிரமாகக் குறைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர் கூறுகையில், "உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் ஊடாக தேயிலைத்துறையில் ஆரோக்கியமான மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என நம்புகின்றோம். உற்பத்தி வருமான பங்கு அடிப்படை முறைமையே இதற்கு சிறந்ததாகும். இதனையே முன்னோக்கி கொண்டுசெல்ல உள்ளோம்.

இலங்கையை பொறுத்தவரையில் 74 சதவீதமான தேயிலை, சிறுதோட்ட உரிமையாளர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்கள் அதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். அவ்வாறானதொரு முறைமையே பெருந்தோட்டத்துறைக்கும் அவசியமாகும். அதனூடாக தொழிலாளர்கள் அதிக சம்பளத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

உற்பத்தி வருமான பங்கு அடிப்படை முறை குறித்து அடிக்கடி பேசி வருகின்றோம். ஆனால் சில காரணங்களுக்காக பெரும்பாலான தோட்டங்களில் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இருந்தபோதிலும், அந்தத் திட்டம் முறையில் உள்ள தோட்டங்களில் வெற்றியளித்துள்ளது. தொழிலாளர்கள் ஆகக்கூடிய சம்பளத்தையும் பெறுகிறார்கள்.

தொழிற்சங்கங்கள் அரசியல் செய்வதால், ஒரு சில தோட்டங்களில் எமது நிலைப்பாடு தவறான தோரணையில் தொழிலாளர்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகிறது. அத்துடன் தோட்டங்களில் வேலை செய்த பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முறையாக தீபாவளி முற்கொடுப்பனவும் வழங்கப்பட்டது. அதாவது 75 சதவீத வரவைக் கொண்டவர்களுக்கு மாத்திரம் முழுமையாக முற்கொடுப்பனவு தொகையை வழங்க தோட்ட நிர்வாகம் தீர்மானித்தது. தொழிலாளர்களின் நலன்சார்ந்த திட்டங்கள் ஒவ்வொரு தோட்டத்திலும் வெவ்வேறு விதமாக முன்னெடுக்கப்படுகின்றன. அந்தந்த தோட்ட நிர்வாகங்கள் அது குறித்து தீர்மானம் மேற்கொள்கின்றன எனவும் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

# ஜல்லிக்கட்டுக்கு மீண்டும் சிக்கல்

ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கான அனுமதியை இரத்து செய்யக்கோரி பீட்டா உள்ளிட்ட 15 அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளன.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கான அனுமதியை இரத்து செய்யக்கோரி பீட்டா உள்ளிட்ட 15 அமைப்புகள் உச்சநீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளன.



இதனையடுத்து சென்னை, தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## முதன்முறை சந்திப்பு

இந்தோனேசியா, ஜகார்த்தாவில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கும் சந்தித்து பேசினர். அப்போது ரிஷி சுனக்குக்க மோடி வாழ்த்து தெரிவித்த நிலையில், இருவரும் சிரித்த முகத்துடன் கைக்குலுக்கி கலந்துரையாடினர்.



# கைலாசாவுக்கு ஆட்கள் தேவை; நித்தி அதிரடி

ஆட்கடத்தல், கொள்ளை, மோசடி, கற்பழிப்பு உள்ளிட்ட பல வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சாமியார் நித்தியானந்தா, கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தனது சீடர்கள் சிலருடன் தலைமறைவானார்.

இந்நிலையில், தான் இந்தியாவை விட்டு சென்றுவிட்டதாக அறிவித்த அவர், கைலாசா என்ற நாட்டை உருவாக்கியிருப்பதாகவும் அதற்கென தனி வங்கி, நாணயம் என்பன காணப்படுவதாகவும் அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் தோன்றி தெரிவித்து வந்தார்.

**“ உலகம் முழுவதும் உள்ள தமது ஆச்சிரமங்களில், எலக்டோனிக், பிளம்மிங், தூதரக அலுவல்கள் போன்ற பணிகளில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை எனவும், பயிற்சி கொடுக்கப்பட்டு ஊதியம் வழங்கப்படும் என்றும் ஓர் அறிவிப்பை நித்தியானந்த வெளியிட்டுள்ளார்**

இந்நிலையில் தற்போது உலகம் முழுவதும் உள்ள தமது ஆச்சிரமங்களில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை என்ற ஓர் அறிவிப்பை நித்தியானந்த வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிவிப்பில், எலக்டோனிக், பிளம்மிங் பணிகளுக்கும் தூதரக பணிகளுக்கும் ஆட்கள் தேவை எனவும், பணியில் சேர்வோருக்கு ஊதியத்துடன் பயிற்சி கொடுக்கப்பட்டு, பல்வேறு ஆசிரமங்களில் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.



சென்னை

# வீராங்கனையின் உயிரை பறித்த வைத்தியசாலை

சென்னை, வியாசர்பாடியைச் சேர்ந்தவர் பிரியா. 17 வயதான இவர் சென்னையில் உள்ள கல்லூரியொன்றில் கல்வி கற்று வந்துள்ளார்.

அதுமட்டுமல்லாது கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர், தேசிய அளவிலான கால்பந்துப் போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு பல சாதனைகளைப் படைந்து வந்துள்ளார்.

இந்நிலையில், அண்மையில் கால்பந்துப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, அவருக்கு காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மருத்துவமனை சென்று பரிசோதித்துப் பார்த்ததில் அவரது காலில் தசைப்பிடிப்பால் சவ்வு விலகி இருப்பது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவருக்கு வேறொரு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டுவந்துள்ளது. எனினும் அவருக்கு கால் வலி குறைவடையவில்லை என்பதால் மேல் சிகிச்சைக்காக அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மாணவியைப் பரிசோதித்த மருத்துவர்கள் காலில் தசைகள் அனைத்தும் அழுகக்கூடிய நிலையில் இருப்பதால் காலை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.


இதனைத் தொடர்ந்து அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் கால்கள் அகற்றப்பட்டன.

இந்நிலையில் தொடர்ந்தும் தீவிர சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டிருந்த அவர் அண்மையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து நடத்தப்பட்ட விசாரணையில், அறுவை சிகிச்சையின் போது மருத்துவர்கள் தவறான சிகிச்சை வழங்கியமையே மாணவியின் உயிரிழப்புக்குக் காரணமெனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், மாணவி பிரியா அரச மருத்துவமனையில் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தமிழக பாரதிய ஜனதா கட்சயின் தலைவர் அண்ணாமலை கவலை தெரிவித்துள்ளார்.

மேலும், "திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சியில் ஒவ்வோர் அரசதுறையும் அழிந்து கொண்டிருக்கிறது. அந்த வரிசையில் மருத்துவ துறையும் சேர்ந்திருப்பது வேதனை அளிக்கிறது" எனவும் தெரிவித்துள்ளார்.



டெல்லி

# காதலியை 35 துண்டுகளாக வெட்டிய காதலன்

புதுடெல்லியில் ஷ்ரத்தா என்ற இளம்பெண், தனது காதலனால் கொலை செய்யப்பட்டு 35 துண்டுகளாக வெட்டி வீசப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

26 வயதான ஷ்ரத்தா மும்பையில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். அங்குதான் அஃப்தாப் அமீன் என்பவரை ஷ்ரத்தா சந்தித்துள்ளார்.

நாளடைவில் இருவருக்கும் இடையே காதல் மலர்ந்துள்ளது. எனினும் ஷ்ரத்தாவின் குடும்பத்தினர் அவர்களது காதலுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் இருவரும் தமது வீட்டைவிட்டு வெளியேறி,புதுடெல்லியில் சத்தர்பூர் பகுதியில் வாடகைக்கு வீடொன்றை எடுத்து, வசித்து வந்தனர்.

இந்நிலையில் ஷ்ரத்தா, அஃப்தாப்பைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியுள்ள நிலையில், அதற்கு அஃப்தாப் மறுப்பு தெரிவித்து வந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததுள்ளது.

இந்நிலையில், மே 18 ஆம் திகதி இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியுள்ள நிலையில், ஆத்திரமடைந்த அஃப்தாப், ஷ்ரத்தாவின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார்.

இதற்கிடையே ஷ்ரத்தாவின் குடும்பத்தினர் நீண்ட நாள்களாக அவரைத் தொடர்பு கொள்ள முயன்று வந்த நிலையில் அது நடைபெறாததால் அச்சமடைந்து, பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இந்நிலையில் ஷ்ரத்தாவின் தந்தை கொடுத்த புகாரின் பேரில், அஃப்தாப் கைது செய்யப்பட்டார். இதன்போது அஃப்தாப் மீது பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில், பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சம்பவ தினத்தன்று ஆத்திரத்தில் ஷ்ரத்தாவின் கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாகவும், பொலிஸாரிடம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க 300 லீற்றர் கொள்ளளவு கொண்ட குளிர் சாதனப் பெட்டியை வாங்கி அதில் ஷ்ரத்தாவின் சடலத்தை 35 துண்டுகளாக வெட்டி வைத்து, அடுத்த 18 நாள்களில் அதனை வெவ்வேறு இடங்களில் வீசியதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஷ்ரத்தாவின் உடல் பாகங்களைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



சென்னை

# பாத்திரத்தில் தலை சிக்கி குழந்தை தவிப்பு

சென்னை, மாதவரம், தபால் பெட்டி பகுதியைச் சேர்ந்தவர் அகிலன் (32). இவரது இரண்டரை வயது மகள் அவந்திகா நேற்றுமுன்தினம் (14) இரவு அலுமினியப் பாத்திரம் ஒன்றை தலையில் ஹெல்மெட் அணிவதுபோல் அணிந்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில் குழந்தையின் தலை பாத்திரத்துக்குள் சிக்கிக் கொண்டது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பெற்றோர், குழந்தையின் தலையில் சிக்கிய பாத்திரத்தை எடுக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை.

இதுகுறித்து தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்துவந்த மாதவரம் தீயணைப்பு வீரர்கள் பாத்திரத்தை லாவகமாகவெட்டி அகற்றினர்.

கேரளா

# 9 மணி வரைக்கும் மணப்பெண் அனுமதி

கேரளாவின் பாலக்காடு பகுதியில் ரகு என்பவருக்கும் அர்சனா என்பவருக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் இத்திருமணத்திற்கு வந்த மணமகனின் நண்பர்கள், திருமணம் ஆன பிறகும், ரகுவை இரவு ஒன்பது மணி வரை தம்முடன் இருக்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மணப்பெண்ணிடம் வைத்துள்ளனர். மேலும் இது குறித்த ஒப்பந்தப் பத்திரமொன்றிலும் மணப்பெண்ணை கையெழுத்து இடுமாறும் அவர்கள் கேட்டுகொண்டுள்ளனர்.

குறித்த ஒப்பந்தப் பத்திரத்தில் 'திருமணம் ஆன பிறகும், எனது கணவர் ரகு அவரது நண்பர்களுடன் இரவு ஒன்பது மணி வரை நேரம் செலவழிக்க அனுமதிக்கப்படுவார். அந்த குறிப்பிட்ட நேரத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் அவரை தொந்தரவு செய்யமாட்டேன்' என எழுதப்பட்டிருந்தது. இந்நிலையில் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.



பிரான்ஸ்


2024 ஒலிம்பிக்

# புதிய சின்னம் அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸில் நடைபெறவுள்ளன.

அந்தவகையில் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 11ஆம் திகதி வரை சாதாரன ஒலிம்பிக் போட்டிகளும், ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 8ஆம் திகதி வரை மாற்றுத் திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் போட்டிகளும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பிரான்ஸின் வரலாற்றையும் அங்கு இடம்பெற்ற புரட்சிகளையும்



பிரதிபலிக்கும்வகையில் 'Phrygian தொப்பிகள் 'புதிய சின்னமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொப்பிகள், சுதந்திர உணர்வை வெளிப்படுத்துவதாகக் கூறப்பட்டது.

பாலி



## பைடன் மோடி சந்தித்துப் பேச்சு

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டிற்கு சென்றுள்ள, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் நேற்று (15) முக்கிய சந்திப்பை நடத்தினர்.

இந்த சந்திப்பு குறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியதாவது:-

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இருவரும் இருதரப்பு ஒத்துழைப்பை ஆய்வு செய்தனர். இந்த சந்திப்பின் போது பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இருதரப்பு மூலோபாய கூட்டுறவை வலுவாக்குதல், குவாட் கூட்டமைப்பில் நெருங்கிய ஒத்துழைப்பு அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு போன்ற எதிர்காலம் சார்ந்த துறைகளில் மேம்படுத்தப்பட்ட இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

இந்தியா-அமெரிக்க கூட்டாண்மையை வலுப்படுத்த அமெரிக்க அதிபர் பைடனின் தொடர்ச்சியான ஆதரவுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். அதனை தொடர்ந்து, இருநாட்டு தலைவர்களும், இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோவை சந்தித்தனர்.

## டுவிட்டர், பேஸ்புக் வரிசையில் அமேசான்

டுவிட்டர், ஃபேஸ்புக் நிறுவனத்தை தொடர்ந்து அமேசான் நிறுவனமும் ஆட்குறைப்பு செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அந்தவகையில் சுமார் 10,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய இருப்பதாகவும், அமேசான் நிறுவன வரலாற்றில் இது மிகப்பெரிய பணிநீக்கமாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக நஷ்டம் அதிகரிப்பதால், ஊழியர்களை பணிநீக்கம் செய்யவும், செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தவும் திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. உலகளவில் அமேசான் நிறுவனத்தில்சுமார் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இந்தோனேசியா

## ஆரம்பமானது G20 உச்சி மாநாடு

உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஜி20 மாநாடு இந்தோனேசியாவின் பாலித் தீவில் உள்ள நுஸா துவாவில் நேற்றைய தினம் (15) ஆரம்பமானது.

இதில் இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோவிடோடோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

G20 அல்லது Group of Twenty என்று அழைக்கப்படும் குழுவானது உலக நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கை உள்ளடக்கியது. அத்துடன் இது உலகப் பொருளியலில் 85 சதவீதத்திற்கும், அனைத்துலக வர்த்தகத்தில் 75 சதவீதத்திற்கும் பொறுப்பு வகிக்கின்றது.

இந்நிலையில் இம்மாநாட்டில் அனைத்துலக சுகாதார நடைமுறைகள், பொருளியல் மீட்சி, கொரோனாப் பரவல் ஆகிய தலைப்புகள் குறித்து கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




அதுமட்டுமல்லாது உக்ரேன் மீதான ரஷ்யப் படையெடுப்பு குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாநாட்டில் உக்ரேன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி (Volodymyr Zelenskiy) இணையவழி ஊடாகக் கலந்துகொள்ளவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ட்ரம்பின் மகளுக்கு டும்... டும்... டும்...

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகளுக்கு நேற்றுமுன்தினம்(14) திருமணம் நடைபெற்றுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப்பின் முன்னாள் மனைவியான மார்லா மேப்பில்சின் ,மகளான 'டிப்பனி டிரம்ப்பிற்கும்' அவரின் காதலரான 'மைக்கேல் பவுஸோவிற்குமே' நேற்று முன்தினம் புளோரிடா மாகாணத்தில் உள்ள பாம் கடற்கரையில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் மகளின் திருமணத்தில் ட்ரம்ப் தன் மனைவி மெலானியா ட்ரம்ப் உடன் பங்கேற்றார்.

மைக்கேல் பவுஸோ, லெபனான் நாட்டின் மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




பிரித்தானியா

## சயனைட்டை விட 6,000 மடங்கு நச்சுத் தன்மை கொண்ட தாவரம்

பிரித்தானியாவில் உள்ள குயின்ஸ் கார்டன் பூங்காவில், சயனைடை விட 6,000 மடங்கு நச்சுத் தன்மை கொண்ட தாவரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'ரிசினஸ் கம்யூனிஸ்ட்' என்று அழைக்கப்படும் இத்தாவரமானது ஆமணக்கு வகையை சேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இத்தாவரம் குறித்த பூங்காவில் இருப்பதை பார்த்த பெண் ஒருவர் அதனை தனது தொலைபேசியில் படம் பிடித்து தனது கணவருக்கு அனுப்பியுள்ளார். அவர் அந்த தாவரத்தின் நச்சுத்தன்மையை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளதுடன் இத்தாவரங்களை கையுறைகளால் கையாள



வேண்டும் எனவும், இத் தாவரத்தின் விதைகளின் நுகர்வு மிகவும் ஆபத்தானது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இத்தாவரமானது உலகிலேயே மிகவும் நச்சுத்தன்மை கொண்ட தாவரம் என்ற கின்னஸ் சாதனையையும் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்தியாவுக்கெதிரான தொடர்களுக்கான

# நியூசிலாந்து குழாம்களில் கப்தில், போல்ட் இல்லை

இந்தியாவுக்கு எதிரான தொடர்களுக்கான நியூசிலாந்தின் இருபதுக்கு - 20 சர்வதேச, ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாம்களில் மார்டின் கப்தில், ட்ரெண்ட் போல்ட் ஆகியோர் இடம்பெறவில்லை.

எவ்வாறாயினும், பல சர்வதேச கிரிக்கெட்டிட்டில் முன்னாலுள்ள நிலையில் போல்ட், கப்திலுக்கான கதவு சாத்தப்படவில்லை என நியூசிலாந்தின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் கரி ஸ்டெட் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து ஒப்பந்தத்திலிருந்து போல்ட் தன்னை விடுவித்துக் கொண்டிருந்த நிலையில், இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் நியூசிலாந்து பதினொருவர் அணியில் கப்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஒ.நா.ச.போ குழாம்: கேன் வில்லியம்ஸன் (அணித்தலைவர்), பின் அலென், மிஷெல் பிறேஸ்வெல், டெவோன் கொன்வே, லொக்கி பெர்கியூசன், டரைல் மிற்செல், அடம் மில்ன், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், மிற்செல் சான்ட்னெர், டிம் சௌதி, டொம் லேதம் (விக்கெட் காப்பாளர்), மற் ஹென்றி.

இ-20 குழாம்: கேன் வில்லியம்ஸன் (அணித்தலைவர்), பின் அலென், மிஷெல் பிறேஸ்வெல், டெவோன் கொன்வே (விக்கெட் காப்பாளர்), லொக்கி பெர்கியூசன், டரைல் மிற்செல், அடம் மில்ன், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், மிற்செல் சான்ட்னெர், டிம் சௌதி, இஷ் சோதி, பிளையர் டிக்னர்.

## கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணி வெற்றி

அஸ்ஹர் இப்றாஹீம்

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலையின் ஆசிரியர் அணிகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில், இரு போட்டிகளிலும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றி பெற்றனர்.

முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் பற்றிமா கல்லூரி அணி 35 ஓட்டங்களைப் பெற்றது. 36 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை



அணி 4.2 ஓவர்களில் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தனர்.

இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 50 ஓட்டங்களை வெற்றி இலக்காக பெற்றனர்.

என்றாலும் கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் ஓவர் முடிவில் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதனால் 14 ஓட்டங்களினால் உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியைப் பெற்றனர்.

## யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் ரொனால்டோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்கள வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, அக்கழகத்தை விட்டு வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வெளியாகவுள்ள நேர்காணலொன்றில் கழகத்தை ரொனால்டோ விமர்சித்துள்ள நிலையிலேயே அவரைக் கழகத்திலிருந்து வெளியேற்றுமாறு கழகத்தின் முகாமையாளர் எரிக் டென் ஹக், கழகத்தின் உரிமையாளர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 37 வயதான ரொனால்டோவைக் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைன், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் ஆகியன முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.







## ஐ.பி.எல்லிருந்து ஓய்வு பெற்ற பொலார்ட்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்), மும்பை இந்தியன்ஸின் சகலதுறை வீரரான கெரான் பொலார்ட் ஓய்வு பெற்றுள்ளார்.

இந்நிலையில், மும்பை இந்தியன்ஸின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றவுள்ள 35 வயதான பொலார்ட், ஐக்கிய அரபு அமீரகத்தின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான ஐ.எல்.டி.20-இல் மும்பை எமிரேட்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 16 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.